Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூ௯] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ பங்குனி மீ ௩௦ உ வெள்ளிக்கிழமை (12 APRIL 1957) [இல- ]

அரசியல் அலை

# 'தீயசேன' ஆட்சித் திருவிளையாடல்கள்!

---:o:---

## மந்திரி மரிக்காரின் 'கட்டியக்காரர்' பதவி

---o---

## பன்னிரண்டு திங்களில் நாடுபட்டிருக்கும் பாடு

---0 0---

முற் காலத்தில் முடிமன்னர்கள் நாடு நல்ல நிலையிலிருக்கின்றதா? மக்கள் மனத்திருப்தியாக வாழ்கின்றனரா? என்று மந்திரிமாரை (ம ஐ மு மந்திரிமார் போன்றவாகளையல்ல) அடிக்கடி விசாரித்து அறிந்து கேள்வதுண்டு. நாடும் நன்முறையிற் செழித்தோங்கியது மக்களும் வண்ணமாக வாழ்க்கையை நடத்தினர்.

இப்பொழுதோ குடியாட்சி பேச்சளவில். நடைமுறையிலே தனி இன ஆட்சி. மந்திரிமார் நாடு நன்கு விருத்தியடைகின்றதா? மக்கள் வாழ்கின்றார்களா? என்று யாருக்குஞ் சொல்ல வேண்டிய விதியில்லை நாட்டுக்கும் மக்களுக்கும் எல்லாம் நன்றாகவேயிருக்கின்றது என்று சொல்லிககொள்வதையே மந்திரிமார் தங்கள் கடமையாய்க் கருதுகின்றார்கள்.

பிரதமர் பண்டாரநாயகவைத் துட்ட கைமுனு என்பர் சிலர். தீய சேன வென்றும் சொல்வர் சிலர். ('துட்ட 'தீய' என்ற அடைமொழிகள் தமிழ்ச் சொற்கள் என்றவகையில் அப்பதங்களிலே பயன்படுத்தப் படாது விட்டாலும் பயனளவில் அப்படியாகவே காணப்படுகின்றனவா என்று வாசக நேயர்களே ஆய்ந்தறிந்து கொள்ளுதல் வேண்டும்.)

Diyasena என்ற புகழுக்கு ஒவ்வொரு சிங்களப் பிரதமரும் உரியவர் என்று அவ்வவர் கட்சியினர் அரற்றுவது வழக்கம். பன்னிரண்டு திங்களாக இந் நாட்டை ஆண்டு வந்த ம. ஐ. முன்னணியார் செய்து முடித்த வன் செயல்களை மக்கள் மறக்கவில்லை, மறக்கவும் மாட்டார்கள். இந்த நிலையிலே மக்களுக்கு மந்திரியார் மரிக்கார் என்ன சொல்கின்றார் இந்த ஆட்சி 'தீய சேன' ஆட்சியாம்!

கானலை நீரென்று கருதுபவர்கள் உண்டு ஆனாற் கறுப்பை வெள்ளையென்று கற்பனை செய்பவர்கள் இருக்கமுடியாது. அப்படியானாற் பகற் குருடர்களாக வன்றோ அன்னார் இருத்தல் வேண்டும்?

மழை வளம் இல்லாமல்; நீர் வரட்சியினால் நாடு எரிமலைபோல் வந்துவிட்டதே யென்றால் அதை ம. ஐ முன்னணி மேற் சுமத்துதல் பழி.

தொற்றுநோய் பரவுகின்றது. அல்லது மற்றும் நோய்கள் மலிந்துவிட்டன என்றும் ஆட்சியாளர் மேற் குற்றம் கொண்டுவருதல் முறையாகாது.

நாட்டிற் குழப்பம்; தொழிலாளர் அதிருப்தி; சட்டங்கள் (சிங்களச் சிறீ எதிர்க்கப்பட்டாலும் அரசாங்கம் கவனியாதிருத்தல் என்று இந்த வகையிலே ஒவ்வொரு நாளும் மக்கள் அலமர வேண்டிய நிலையைத் 'தீயசேன' ஆட்சிப் பேறு என்று மந்திரி மரிக்கார் வர்ணித்துக் கூறுகின்றார் என்றால் இந்த விபரீதம் ஆதி 'தீயசேனவை'ப் பொறுத்ததா; இன்று அப் புகழைப்பெற்றிருக்கின்றார் என்று கூறப்படும் திரு பண்டாரநாயகவைப் பொறுத்ததா? அன்றி, மந்திரி மரிக்காரைப் பொறுத்ததா?

'தீயசேன' ஆட்சியில் ஆட்சியாளருக்கும் அரசாங்க சேவை அதிகார சபைக்கும் (Public Service Commission ஒற்றுமைப்பாடில்லை என்று தீயசேன' ஆட்சிக் கல்வி அமைச்சர் திரு. தகநாயக கூறுவதொன்றே ம.ஐ. முன்னணி அரசாங்கத்தின மதிப்புக்குப் போதிய சான்றாகின்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.

## ஏவிளம்பி வருடப்பிறப்பு

---:0:---

துர்முகி கழிந்து வருகின்றது. 13—4—57 பகல் 12. 17 க்கு ஏவிளம்பி வருடம் பிறக்கின்றதென்று வாக்கிய பஞ்சாங்கம் சொல்லுகின்றது; பிற்பகல் 4 12 க்குப் பிறக்கின்றதென்கிறது திருக்கணிதம். விஷு புண்ணிய காலமும் முறையே முற்பகல் 8-17 தொடக்கம் மாலை 4 17 வரையுமென்றும பகல் 12-12 தொடக்கம் இரவு 8-12 வரையுமென்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

**பின்வருமாறு பேசப்படுகின்றது வருடப் பலன்:**

ஏவிளம்பி மாரியற்ப மெங்கும் விலைகுறைவாம்
பூவில் விளைவர்தாம் போர்மிகுதி — சாவதிகம்
ஆதுமே வேந்த ரநியாய மேபுரிவார்
வேதுமே மேத்னிதீ மேல்.

இவ்வாண்டு மழை மாரி குறையும் அதனால் விளைவுக் குன்றும. ஆட்சிப்பீடத்திலிருப்போர் அநீதி செய்வர். சண்டைகள் மூண்டு சாக்காடு அதிகரிக்கும். இவற்றால் உலகெங்கும் துன்பம் மிகுந்து மக்கள் வருந்துவர் என்பது நாம அறிய வருவதாகும்

ஆகவே, "அறத்தினூஉங் காக்கமுமில்லை அதனை — மறத்தலினூங்கில்லைக்கேடு" என்ற அருள் வாக்கை நாம் ஒவ்வொருவரும் மனத்திலிருத்தித் துன்பத்துக் கேதுவாகிய தீவினைகளை அகற்ற முயலுதல் வேண்டும். "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கியாண்டுமிடும்பையில" என்றமையால் நாம் இறைவன் திருவடிகளைச் சரணடைந்து "புன்னெறி யதனிற்செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி யொழுகச்செய்து' எமக்குத் திருவருள்புரியுமாறு வழுத்தி அவருக்கு வழிபாடாற்றி இன்புறுவோமாக.

# சனநாயக ஆட்சிச் சிறப்புக்கள்

---0-0---

## இந்தியாவில் அமைந்த காரணமும் வளர்க்கவேண்டிய முறையும்

---

இந்திய மக்கள் சபையிற் பிரியாவிடைப் பேச்சுக்கள் நிகழ்ந்தபொழுது சனநாயக ஆட்சிப் பண்புபற்றி பண்டிதநேரு அவர்கள் ஓர் சிறந்த விளக்கம் கொடுத்தார். அவர் பேசும்போது, நாங்கள் மேற்கொண்டுள்ள பல முயற்சிகள், நாங்கள் செய்யவேண்டிய பல தருமங்கள், அவற்றின் தொடர்பில் நாம் நின்றுழைக்க வேண்டிய பல வழிகள் ஆதியனவபற்றிச் சிந்திக்கும்போது, நாம் இந்நாட்டுச்சேவைக்கு மேற்கொண்டுள்ள சனநாயகமுறையின் அத்திபாரம் எவ்வளவு ஆழமானதாயுள்ளது; அது எவ்வளவு அசைவற்ற தன்மையதாயிருக்கின்றது என்பது பற்றிய உண்மையை எங்கள் மனத்தில் மற்றெல்லாவற்றிலும் மேலானதாகப் பதித்தில் வேண்டும்; இதன் வேர் சென்றுள்ள ஆழத்திலும், இத்துறையில் நிகழுக்குள்ள ஒழுக்கம் உறுதி என்பவற்றிலுமே இந்நாட்டு முன்னேற்றம் தங்கி யிருப்பதால் நாம் இத்துறையில் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியதாயிருக்கின்றது என்றார்.

பாராளுமன்றச் சனநாயகமானது சமாதானமான வாழ்க்கை, சமாதானமான செயல்கள், சமாதான முறைகளால் மனமாற்றம் செயல் மாற்றம் என்னும் பண்புகள் இயல்பாயமையப்பெற்றதாயிருக்கின்றது. இப்படியமையாவிட்டால் அச்சனநாயகம் உண்மைச் சனநாகமாக மாட்டாது. சனநாயகம் சமாதானம் என்றும பன்முறை பேசுகின்ற நாங்கள சமாதான முறையாலன்றிப் பிற முறையால் இவற்றை அடையமுடியாதென்பதை மனத்தில் வைததிருக்கவேண்டும ஒற்றுமையைச் சிந்திக்கும் எண்ணங்களை எங்கள் மனத்தில் இடம்பெறும்படி ஆக்குதி அழித்தல் வேண்டும். அவ்வாறு செய்தாலே நாட்டின் எதிர்காலம் வலியுற்று விளங்கச் செய்யலாம்.

வேண்டுமென்றே சனநாயக முறையை இந்தியா தெரிந்தெடுத்தது. இவ்வாட்சிமுறை எங்கள் மனத்தில் முன்னரே இடம் பெற்றிருந்தமையாலும, இது எங்கள் பண்டைய முறைகளைத் தழுவியதாயிருநதமையாலும் இதை நாங்கள் தெரிந்தெடுத்தோம், பிற நாடுகளில் விசேடமாகப் பிருத்தானியாவில் அது, பெரும்பயன் கொடுத்துச் சிறந்து விளங்கியதும் ஓர் காரணம் என்பதைக் குறிப்பிடுதல் முறையாகும். ஆகையினாலே, முழுமையும் அதுபோல் அமையாத போதிலும் பெரும்பாலும் பிரித்தானிய பாராளுமன்றத்தைப் பின்பற்றியே இச்சபை அமைக்கப்பட்டுள்ளது.

## நயினாதீவுத் தேர்த் திருப்பணி

---

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருப்பணிச் சபையின் காரியதரிசியாக, காலஞ்சென்ற திரு. வே. சுந்தரம்பிள்ளை அவர்களின் இடத்துக்கு அவருடைய சகோதரர் திரு. வே. செல்வநாயகம் நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

---

**சமயத் தாபனங்களுக்கு வருமானவரி**

---

சமயத்தாபனங்களின் வருமானத்தில் இதுகாறும் வரிவிதிக்கப்படாமல் வந்தது. இப்பொழுது வரி விதிக்கும் சட்ட திட்டமொன்று அரசாங்கத்தால் ஆராயப்பட்டு வருகின்றது. அதன்படி காணி வருமானங்கள், வட்டிகள், வாடகைகள் நன்கொடைகள் முதலியவற்றில் வரி விதிக்கப்படும்.

---

பாராளுமன்றச் சனநாயகம் நன்கமைதற்குப் பல சிறப்புக்கள் இன்றியமையாதவையாய் வேண்டப்படுகின்றன. செயலாற்றும் திறன், செயலாற்றும் சிறந்தமுறை, தன்னடக்கம், ஒத்துழைப்பு, ஆதி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

சனிக்கிழமை 13—4—57 தொடக்கம் 19—4—57 வரையும் சைவப்பிரகாசயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் வருடப் பிறப்பின் பொருட்டுத் திறக்கப்படமாட்டா என்றும் வெள்ளிக்கிழமை 19-4-57-ல் இந்துசாதன ஆங்கில தமிழ் வெளியீடுகள் வழக்கம்போல் வெளிவரமாட்டாவென்றும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சனிக்கிழமை 20-4-57-ல் வழக்கம் போல் அலுவல் நடைபெறும். அதிபர்

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்க
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். துர்முகிவூ பங்குனிமீ ௩௦ உ வெள்ளிக்கிழமை


## ஏவிளம்பி இனிது அமைவதாக

ஆண்டின் தோற்றத்திலும் மறைவிலும் அபிமானங் காட்டுகின்றது உலகம். இன்பமும் துன்பமும் சகடக்கால் போலத் தொடர்ந்து வருகின்ற தன்மையினால் மனிதகுலம் மாற்றம் என்ற நிகழ்ச்சியிற் கருத்து வைக்கும் வழமையிற் பழகி வருகின்றது.

துர்முகியைத் தொடர்ந்து ஏவிளம்பி நாளை தோன்றும். சென்ற பன்னிரண்டு திங்களிலே நிகழ்ந்தனவற்றின் பெறுபேறு என்னும் ஐந்தொகைக் கணக்கை உற்று நோக்குமிடத்துத் தீமை பெருகி நன்மை அருகிவந்ததாக அநுமானிக்கவேண்டியிருக்கின்றது. ஈழநாட்டை எடுத்துப் பேசும்பொழுது தீதும் இடுக்கணுமே காணப்படுகின்றன. பல்லாண்டுகளுக்கு முன்னிருந்த இன ஒற்றுமையும் நல்லெண்ணமும் இல்லாதொழிந்தனவாகவும் வேற்றுமையும் விபரீதமும் மேலோங்குவனவாகவும் புலப்படும். அறம் குன்றி வருகின்றதென்றால் அறிவும் இறைநெறியும் அகன்றுவிட்டனவென்றே சொல்லுதல் வேண்டும்.

'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமெ'ன்று செப்புவதற்கிடமில்லை. இனி எதிர்காலத்தின் சிறப்பு இயைதல் வேண்டுமெனின் மேன்மைகொள் சைவநீதி உலகில் விளங்குதல் இன்றியமையாததாகின்றது. அரசியல் நெறியில் வந்த அறநெறி வழாமற் காத்தல் ஆட்சியாளர் கடமையன்றோ?

நீதிநெறி வழுவா மனுமுறை நிகழ்வதற்கு ஆட்சியாளரும் மக்களும அறிவு ஒழுக்கம் இறை வழிபாடு உள்ளவர்களாய்த் திகழ்தல் இன்றியமையாததொன்றாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தொன்னெறி அரசியற் கொள்கையாய் அமைதல் வேண்டும். அறம் நிலவுமிடத்து அரசியல் பிழையாதென்ற உணர்ச்சி அமைச்சர்பால் ஊற்றெடுத்தல் வேண்டும. மதம் மொழி, இனம் என்பவற்றால் வேற்றுமைகள் விளைதல் ஆகாதென்ற ஆண்மை தோற்றுதல் வேண்டும். இந்த வகையிலே எழுச்சியும்உணர்ச்சியும் ஏவிளம்பிப் புத்தாண்டில் மக்களிடத்தும் அன்னுருக்காக அரசு நடத்தும் அமைச்சர்களிடத்தும் உண்டாவதற்கு இறைவன் இன்னருளை வேண்டுவோமாக.

# செங்குந்தர் கல்லூரியில் "சுடரொளி" விழா

## தமிழ்ப்பண்பாட்டைத் தெரிக்கும் தமிழ் இலக்கியம்

"பதினன்கு ஆண்டுகள் காடுகளிலே திரிந்து தவவேடம் பூண்டு உலக இன்பங்களைத் துறந்து வாழ்ந்தது இராமனல்ல, பரதனேயாகும் அண்ணனுக்காக அரசுப் பொறுப்பை ஏற்ற பரதனின் சிந்தனையெல்லாம் இராமனைப் பற்றியவையாகவே இருந்தன. செய்த செய்கையெல்லாம் இராமனுக்காகவே செய்தான். நாட்டிலே இருந்து நலம் பல அனுபவிக்கக் கூடிய வசதிகள் பல இருந்தபோதிலும் காட்டிலேயிருந்த இராமனையே நினைந்து நினைந்து வருந்தினன். அவனுக்குக் கிட்டிய பதவி முட்படுக்கையைப் போன்றிருந்தது. பரதனுடைய இந்தத் தியாக மனப்பான்மை, சகிப்புத்தன்மை நம் மனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். உயர்ந்த இலக்கியங்களைப் படிக்கும்போது இப்படியான சிறந்த குணப்பண்புகள் நம் மனதில் பதிந்து, சிறிது சிறிதாக நம்மையும் உயரச் செய்கின்றன" என வைத்தீஸ்வர வித்தியாலயத் தமிழ் விரிவுரையாளர் வித்வான். திரு. பொன். முத்துக்குமாரன் B. O. L. அவர்கள் சென்ற 5-4-57 வெள்ளிக்கிழமை திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற "சுடரொளி" பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் "வாழ்க்கையும் இலக்கியமும்" என்பது பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ் விழாவிற்குக் கல்லூரி அதிபர் திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். செல்வன் செ. சரவணபவான் வரவேற்புரைநிகழ்த்தினர். பாடலைகளில மாணவர்கள் இரண்டு விதமான கல்வியைக் கற்க வேண்டும ஒன்று பிழைப்பிற்காகப் படிப்பது மற்றையது நமது பாரம்பரியத்தை, கலாச்சாரத்தை, பண்பாட்டைப் பற்றிப் படிப்பது தமிழனுடைய பண்பாடு தனிச் சிறப்பு வாய்ந்தது. "அன்பினால் உலகினை ஆள்வோம்"என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவன் தமிழன். "யாதுமூரே யாவரும் கேளிர்" என்பது அவனுடைய கொள்கை. வளர்ந்து வரும் மாணவர் சமுதாயம் இந்தப் பழம் பெரும் பண்பாட்டை நன்கு அறிய வேண்டும். அத்துடன் மாணவர்களின் உள்ளக் கருத்துக்களைப் பெரியோரும் அறிய வேண்டும் என்று தலைவர் தமது தலைமையுரையிற் கூறினர்.

அதன்பின் பத்திரிகை ஆசிரியர்களுள் செல்வி பகீரத லட்சுமி கலைவாணியின் பாதங்களில் சுடரொளியின் முதலாவது இதழைச் சமர்ப்பித்தார். சாதாரண மனிதராகிய நாமும் பனையைப் பார்க்கின்றோம். புலவனும் பார்க்கின்றான். ஆனல் புலவனுடைய மனதில் புதிய உணர்ச்சிகளும், கற்பனைகளும் தோன்றுகின்றன. சாதாரணபனைகற்பகதருவாகக் காட்சியளிக்கின்றது. இதைப் போன்றே உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள்புலவர்கள்உள்ளங்களிலே வேறு வகையான உணர்ச்சிகளை உண்டாக்குகின்றன. சிறந்த மனிதரின் வாழ்க்கையிலே நிகழும் சிறந்த நிகழ்ச்சிகளை வைத்து இலக்கியம் படைக்கின்றான் புலவன். தாழ்ந்த நிலையில் இருக்கும் எமக்கு இத்தகைய இலக்கியங்கள்வழி காட்டியாக விளங்குகின்றன. பேர் பெற்ற கட்டட அமைப்புக் கலைஞனால் கட்டப்பெற்ற வீடுகளை போன்றவை தமிழ் இலக்கிய நூல்கள். ஒருவித பயமுமின்றி வீட்டினுட் சென்று வசிப்பதைப் போன்று எங்கள் இலக்கியங்கள் கூறும் வாழ்க்கை முறைகளை நாமும் பின்பற்றலாம் என்று மேலும் தொடர்ந்து பேசும்போது வித்துவான் பொன் முத்துக்குமாரன் கூறினர்.

செல்வி சி. கனகாம்பிகை தமிழுணர்ச்சிப் பாடல்கள்பாடினர் செல்வி அ. புவனேஸ்வரி அனைவருக்கும் நன்றி கூறினர். கல்லூரி மாணவிகள் கல்லூரிக் கீதம் பாடினர்கள். செல்வன் சோமசுந்தரத்தின் இறைவணக்கத்துடன் விழா இனிது நிறைவேறியது.

# திருக்கேதீச்சரத்தில்

## வருடப்பிறப்புடன் அலங்கார உற்சவம்

திருக்கேதீச்சரநாதர் திருக்கோயிலில் ஏவிளம்பி வருஷம் சித்திரை 7ந் திகதி வெள்ளிக்கிழமை (19-4-57) தொடக்கம் திருவருளின் வழி சிறந்தமுறையில் உற்சவங்கள் நடைபெறுமென்றும் சித்திரைமீ 17ந் திகதி (29-4-57) தீர்த்தோற்சவம் நடைபெறுமென்றும் வருடப்பிறப்பு நாளாகிய சனிக்கிழமை 13-4-57 ல் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறுமென்றும் மேற்படி கோயில் திருப்பணிச் சபைத் தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களும் காரியதரிசி திரு சு சிவசுப்பிரமணியம் அவர்களும் அறியத்தந்து சுவாமி தரிசனஞ்செய்து திருவருளைப் பெற்று இன்புறுமாறு அன்பர்களை அழைத்து நிற்கின்றனர்

# வள்ளுவர் காட்டிய மகளிர் பெருமை

[செல்வி பூமணி இராசையா அவர்கள் திருவள்ளுவர் திருநாளாகிய மாசி உத்தர தினத்தில் இலங்கை வானொலியிற் பேசியது]

செந்தமிழ் மொழியிலுள்ள தமிழிலக்கிய நூல்களுக்கெல்லாம் நாயகமணியாக விளங்குவது திருக்குறள். அந்நூலில் எல்லாப் பொருளும் உள்ளன. அதில் கூறப்படாதது ஒன்றுமேயில்லை. திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டேயிருக்கும். தமிழ் மணம் வீசாத இடத்திலும் திருக்குறளின் மணம் வீசுகின்றதென்று கூறுவதே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

ஏனெனின் தமிழ் வழங்காத பிற நாடுகளிலுள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்புக்களைப் படித்து இன்புறுகின்றனர். அங்கே தமிழ் மணம் ஏது? நாமெல்லாம் தமிழை அறிந்து அதன் மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளை அறிந்து அதன் மூலம் தமிழைப்பற்றி அறிந்து கொள்ளுகின்றார்கள். இதனல் தமிழைக் காட்டிலும் திருக்குறளுக்கு மதிப்பு அதிகமாக இருப்பதை அறிகிறோமல்லவா? மகாத்மா காந்தி அடிகள் திருக்குறளைப் படிப்பதற்காகவே தமிழைக் கற்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள், இத்தகைய சிறந்த நூலை எமக்கு மனமுவந்தளித்த திருவள்ளுவரை நாம் நினைவுகூருதல் அவசியமல்லவா?

திருக்குறளில் புதியகருத்துக்களையும் நயங்களையும் கண்டு அக மகிழ்கின்றோம். பிறர்க்கும் களிப்பூட்டுகின்றோம். இத்தகைய சிறந்த குறள் நூலில் மகளிரைப் பற்றி மிகவுஞ்சிறப்பாகவே கூறப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டிலே பெண்கள் ஒருபோதும் அடிமையாக வாழவில்லை "பெண்கொடியாக நடந்த துலகே"என்று திருமூலநாயனர் திருமந்திரத்தில் கூறியுள்ளார். இதனலை பெண்களினல் தான் உலகம் இயங்குகின்றது என்று தெரிகிறதல்லவா? பெண்கள் கல்வியறிவு அரசியல் துறை முதலிய துறைகளிலெல்லாம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர் என்று நமக்கு அறியக்கிடக்கின்றது.

பெண்களுக்கு உடல்வலியும், மனவலியும், அறிவு வலியும் இல்லையாதலின் அவர்களது கற்பினைக் காக்க வேண்டுமானல் வீட்டில் பூட்டி வைத்தல் வேண்டும் என்ற கொள்கையை மறுக்கின்றார் வள்ளுவர்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# சிதம்பரம் கோயில்

## ஆயிரக்கால் மண்டபப் புனருந்தாரண நிதி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அன்பர்கள் சிதம்பரம் கோயில் ஆயிரக்கால் மண்டபப் புனருத்தாரண நிதியின் பொருட்டு எமக்குப் பணம் அனுப்பியிருக்கின்றார்கள்

| பெயர் | விலாசம் | ரூ. | ச. |
|---|---|---|---|
| ந. ஏகாம்பரம் | திருக்கோயில் கிழக்குமாகாணம்) | 20 | 00 |
| இ. சீவரத்தினம் | பொலிஸ்நிலையம் கொழும்பு | 2 | 00 |
| சு. இராமலிங்கம் | மாந்தீவு, மட்டக்கிழப்பு | 1 | 00 |
| ஸ்ரீமதி சி. விசாலாட்சியம்பாள் | | 5 | 00 |
| | | 28 | 00 |

1-4-57, சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்,

இ. பொ. இராசையா
தனதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராண வசனம்

### திருநாவுக்கரசு நாயனுர் புராணம்

**திருவருள் கொண்டு திறந்து மூடுதல்**

பின்னர் இருவரும் வேதாரணியம் வந்தனர் அங்கு வேதங்களை அருச்சித்துத் திருக்காப்புச் செய்த திருக்கதவு அன்றுமுதல் இன்றுவரை அடைபட்டுக் கிடந்தது. சம்பந்தர் அப்பரை நோக்கி "எப்படியும் சுவாமியை நேர் வாயில் வழிச் சென்று தரிசிக்க வேண்டும். கதவு திறக்கப்பாடும்" என்றார். "பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ" என்று பாடினுர் அப்பர். சரிவரவில்லை, அடுத்துப் பிடித்தார் "இரக்க மொன்றிலீர்" என்று. திறபட்டுவிட்டது கதவு. திருவருளை வணங்கி உட்சென்று தரிசனஞ் செய்து வெளியில் வந்தனர். பின்னர் அப்பர் சம்பந்தரைப் பார்த்து, "நீர் அடைக்கப் பாடும்" என்றார் 'பாடினுர் சம்பந்தர். என்ன அதிசயம்! 'சதுரம் மறை' என்னும் முதற் பாட்டிலே கதவு தானே மூடினது எல்லோருக்கும் பெரிய ஆச்சரியம். திருவருள் கொண்டு திறந்து மூடும் மகிமையே மகிமை.

**அங்கே வாவென்று போனுரதென்கொலோ?**

சம்பந்தரின் முதற் பாட்டிலே கதவு அடைபட்டுவிட்டது. பதிகம் முடிந்துதான் எனக்குத் திறந்தது ஏன் அப்படி? இது அப்பர் விசாரம். அப்பொழுது பரமசிவன்; "நாம் வாய்மூரில் இருப்போம் அவ்விடத்திற்குத் தொடர்ந்து வா" என அருளினுர். உடனே எழுந்து,

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக் கொணடங்கே வந்தடை யாள மருளினுர்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனு
ரங்கே வாவென்று போனுர தென்கொலோ"

என்னும் பதிகம் பாடிக்கொண்டு போனுர். பரமசிவன் முன்னுலே கோலங் காட்டிக்கொண்டு நடந்தார். சம்பந்தரும், அப்பர் போவதை அறிந்து புறப்பட்டார். காட்சி கொடுப்பவர் போல ஒரு கோயிலைக் காட்டிச் சிவன் மறைந்தார். அப்பொழுது அப்பர் "சுவாமீ அடியார்களிற் சிறந்வர் சம்பந்தர்; அவரே கதவைத் திறக்க வேண்டும் என்பதை அறியாமற் செய்த எனக்கு ஒளிக்கலாம்; முதற் பாட்டிலே கதவை அடைத்தவர் அவர்; அவருக்கு எப்படி ஒளிக்கலாம்" என்றார் உடனே இறைவன் சம்பந்தருக்கு காட்சியருள அவர் அப்பருக்குங் காட்டினுர்.

**கண்டுவணங்கியன்றிக் காலெடேன்**

பின்னர் இருவரும் திருவாய்மூருக்குச் சென்று அங்குநின்று வேதாரணியத்துக்கு வந்தனர் இங்கேயிருந்தனர் மங்கையர்க்கரசியும் குலச்சிறையும். மங்கையர்க்கரசி இவர் சோழமன்னன் மகள். பாண்டியன் மனைவி. கற்பிற் சிறந்தவர். சமணர்களுடைய துர்ப்போதனையினுல் ஆருகத மதத்தில் ஆழ்ந்த தங் கணவனையும் நாட்டையும் மீண்டுஞ் சைவங் கமழச் செய்தவர் குலச்சிறையார் குலச்சிறை நாயனுர் எனவும் படுவர். பாண்டியனுடைய முதன் மந்திரி. இவர்களுடைய சரித்திரம் சம்பந்த மூர்த்தி நாயனுர் புராணத்தில் படிக்கலாகும் மங்கையர்க்கரசியும் குலச்சிறையாரும் சம்பந்தருக்குத் தூது அனுப்பினர். பாண்டி நாட்டில் சமணத்தை அழித்துச் சைவத்தை நிலை நிறுத்த விரும்பினுர் சம்பந்தர். "சமணர் செய்கைகள் யாவும் எமக்குத் தெரியும்; அதிலே பட்டுப் பழுத்த கட்டை இது; போக வேண்டாம்" எனத் தடுத்தார் அப்பர். சம்பந்தர் இசையவில்லை. எழுந்தருளினுர் நாட்டுக்கு. அவர் செல்ல,

அப்பர் திருவாவடுதுறைக்கு வழிக்கொண்டார். திருவாவடுதுறையீசன் சம்பந்தர் பாடிய ஒரு திருப்பதிகத்துக்கு ஆயிரம் பொன் அருளியவர். அப்பர் அங்குச் சென்று அதன் திறத்தை 'மாயிரு ஞாலமெல்லாம்' என்னும் பதிகத்தினுலே சிறப்பித்துப் பாடினுர். அப்பால் வடதளியென்ெரு தலத்தை யண்மினுர். அங்குள்ள சிவலிங்கத்தைச் சமணர்கள் மறைத்துப் போட்டார்கள். அதனைக் கண்டு வணங்கியன்றிக் காலெடுத்து அப்பால் வையேன், என்று ஆங்கிருந்தார். நாவுக்கரசன் நயமைக் கண்டு குடிபிட விரும்புகின்ருன. சமணர்களை அழித்து நமக்கு ஆலயஞ் செய்தல் வேண்டும் என்று அரசன் சொப்பனங் கண்டான். சமணர்கள் வஞ்சனையை உணர்ந்தான் அரசன். அவர்களை அழித்தான். ஆலயத்தைப் புதுக்கி அமைத்தான் கண்ட அப்பர் ஆனந்தங் கொண்டார். சுவாமியை வணங்கித்

"தலையெ லாம்பறிக் குஞ்ச மண் கையருணிலையி னுன்மறைத் தான் மறைக் கொண்ணுமே
யலையி ஞர்பொழி லாறை வடதளி
நிலையி னுனடி யேநினைந் துய்ம்மினே"

எனப் பாடிப் பரவிக்கொண்டு திருப்பைஞ்ஞீலி என்னுந் தலத்திற்கு வழிக்கொண்டார்.

இன்றைய பாடத்தில் முதலாவதாக நீங்கள் திருநாவுக்கரசு நாயனுருக்குத் திருவதிகை மக்கள் செய்த வரவேற்பையும் அவருடைய திருமேனிப் பொலிவு எப்படியென் பதையும் அறிந்தீர்கள். அவருடைய திருமேனிப் பொலிவின் அருமையையும் பெருமையையும் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் மிகவும் அருமையாக எடுத்துக் காட்டுகின்ருர். அந்தச் செய்யுளைப் படித்துக் காட்டுகிறேன் பாருங்கள்.

தூயவெண்ணீறு துதைந்த
பொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தை
யும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு
தூய செவ்வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே',

என்ன அருமையான செய்யுள். எவ்வளவு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிருர் சேக்கிழார். இச் செய்யுளை நீங்கள் மனனம் பண்ணிக் கொள்ளுதல் நன்று. அப்பால் குணதரன் என்னும் காடவ மன்னன் குணதர வீச்சரம் என்னுங் கோயிலைக் கட்டியமை திருத்தூங்கானை மாடத்தில் இறைவன் திருவுளப்படி சிவபூதம் சூல இடபக் குறிகளை நாயனுர் மேற் பொறித்தமை; அப்பரும் சம்பந்தரும் கலந்துரையாடியமை, அப்பூதியடிகள் விருந்து புரிந்தமை. இறந்துபோன அவருடைய புத்திரனை உயிர் பெறச் செய்தமை. திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்று அன்னதானம் புரிந்து பஞ்சம் போக்கியமை. வேதாரணியத்துத் திருக் கதவு திறக்கவும் அடைக்கவும் திருப்பதிகம் பாடியமை திருவாய்மூருக்குப் போகும் வழியில் இறைவன் காட்சியருளியமை வடதளி என்னுந் தலத்தில் சமணர்களால் மறைக்கப்பட்ட ஆலயத்தைப் புதுக்கி அமைக்கச் செய்தமை முதலான விஷயங்களைப்பற்றியும் அறிந்து கொண்டீர்கள்.

மேற்கொண்டு நாவுக்கரசரின் எஞ்சிய சரித்திரத்தையும் பிறவற்றையும்பற்றி அந்தப் பாடத்திற் படிப்போம்,

* * * வளரும்

# வட்டக்கோடை தமிழ் முன்னேற்றச் சங்கம்

## வரவேற்பு விழாவில் பல அறிவுரைகள்

வட்டக்கொடை தமிழ் முன்னேற்றச் சங்க ஆதரவில் 31-3-57 ஞாயிற்றுக் கிழமை சுவாமி சச்சிதானந்த அவர்களுக்கு வரவேற்பு உபசாரம் ஒன்று செய்யப்பெற்றது.


வட்டக்கொடை தபால் நிலையச் சந்தியிலிருந்து சுவாமிகளை மேளதாளத்துடன் தமிழ் சிங்கள மக்கள் ஒன்று கூடி ஊர்வலமாக அழைத்து வந்தனர். மாலை 2 மணியளவில் வட்டக்கொடை விநாயகர் ஆலயத்தில் மேற்படி சங்க ஆதரவில் விசேட பூசையுடன் தலைவர் திரு அ. சபாபதி அவர்களின் தலைமையில்கூட்டம் ஆரம்பமாகியது. தலைவர் பேசும்போது மக்கள் துண்டுபட்டுத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கல்லெறிபட்டு வீணே நகர் காவலருக்குப் பணவிரயஞ்செய்து கண்டனங்களையும் கவலைகளையும் விலைக்கு வாங்குவது விரும்பத்தக்கதல்ல. ஒவ்வொருவரும் சுதந்திரமாக, சாந்தியாக வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். அண்ணன், தம்பி, கணவன், மனைவி ஆகியோரே வெவ்வேறு கட்சிகளில் இருந்தாலும் அவர்களை,பலாத்காரமுறையில் ஒன்றுபடுத்துவது பயனைத்தராது. தொழிலாளர் என்ற முறையில் ஒற்றுமையாகக் கட்டுக்கோப்புடன் ஒரே கட்சியில் இருப்பது தான் சிறந்தது என்று கூறினுர்.

சுவாமி அவர்கள் பேசிய போது பல கதைகள் மூலம் ஒற்றுமையை விளக்கினுர். இடையே ஓர் அன்பர் தெய்விகத்தைப் பற்றிப் பேசும்படி கேட்டார் அடிகள் சிரித்தபடி தெய்விகம் என்ருல் என்ன. இது தெய்விகம் இல்லையா? சமயம் என்பது மனிதன் சந்தோஷமாக வாழவே வகுக்கப்பட்டது. தெய்விகம் சம்பந்தப்படாதது இங்கு ஒன்றுமேயில்லை என்று கூறித் தமிழ்மக்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழவேண்டிய அவசியத்தை விளக்கினுர்.

அடுத்துப்பேசிய திரு சபா. ஆனந்தர் வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே சிறந்தது என்பதை சிவபெருமானின் சடாமுடியில் பிறவி விரோதிகளான சர்ப்பமும் சந்திரனும் ஒன்ருயிருப்பதைச் சுட்டிக் காட்டி விளக்கினுர்.

பின்பு வித்துவான் திரு. எஸ். கந்தையாவும், திரு. எஸ். சிவரத்தினமும் ஒற்றுமை பற்றிப் பேசினர். ஈற்றில் தலைவரின் நன்றியுரையுடன் விழா நிறைவெய்தியது.

---




## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரியர் அவர்,

### யமுனு ஏரியில் அம்மை உருவம்

மேலே குறிப்பிட்ட உருவம் நல்லூர் சங்கிலித் தோப்பிலிருக்கும் யமுனுரியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகக் கருதினேன். குறித்த விக்கிரகம் வண்ணுர்பண்ணைச்சிவன்கோவிலில் சிலகாலத்திற்கு முன் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடந்தபோது, அதற்குமுன் சுமார் பத்து வருடத்திற்கு மேலாக அம்பிகையை ஆவாகனம்செய்து—வாலஸ்தாபனஞ் செய்து பூசித்துவந்த சந்தன மரத்திற் செதுக்கிய அம்பிகையின் திருவுருவை, மூல அம்பிகையின் ஆவாகனம் செய்தபின் (லிங்கமும் அப்படியே சந்தன மரத்திற் செதுக்கியது) யமுனு ஏரியில் இட்டதாகக் கேள்வி. மேலே குறித்த உருவம் அதாகவும் இருக்கலாம். கோவில் அர்ச்சகராக இருக்கும் பிரம்மஸ்ரீ இராமநாதக்குருக்கள் அடையாளம் காட்டவுங்கூடும். போர்த்துக்கீசியர் காலத்துத் திருவுருவம் மரத்தினுலாயது நீருள் இருந்ததென்பதை நம்ப முடியவில்லை.

சி. நா. சொக்கநாதபிள்ளை
மேலைப்புலோலி
பருத்தித்துறை.

---

### கிழக்குப் பாக்கிஸ்தானில் சுதந்திரப் பிரேரணை

கிழக்குப் பாக்கிஸ்தானுக்குச் சுதந்திர அரசியலமைப்புக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்று கிழக்குப் பாக்கிஸ்தான் அராங்கசபை ஓர் பிரேரணையை நிறைவேற்றியுள்ளது. இதுபற்றித்தாம் சிந்திக்க மாட்டாரென்று சொல்லி கிழக்குப் பாக்கிஸ்தான் மக்களைபபரபரப்படையவேண்டாமென்றுகேட்டுக்கொண்டாராம பாக்கிஸ்தான் முதல் முந்திரி ஸ்ரீ எஸ். எச். சுரவார்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாவதானி கதிரவேற்பிள்ளை

## பெருமைகளைப் பேசிப் பெருமை பெறுதல் முறை

திரு. சி. சுப்பிரமணியம்
மகாவேலந்தணி

இவர் ஏறக்குறைய 97 ஆண்டுகளுக்கு முன்னே மேலைப் புலோலியில் வேளாள குலத்தில் நாகப்ப பிள்ளைஎன்பவருக்குப்புதல்வராகப் பிறந்தார். இளமை தொட்டு தீவிர புத்தியும் ஞாபக சக்தியும் உடையவர். இவர் வித்தியாரம்பஞ் செய்தபின் அவ்வூர் வித்தியாசாலையில் படித்து வந்தார். வறிய குடும்பத்திற் பிறந்தபடியால்நீண்டகாலம் கல்வி கற்க முடியாதவராய் 6-ம் வகுப்புடன் வித்தியாசாலையை விட்டு அவ்வூர் நொத்தாரிசு ஸ்ரீ சிதம்பரப் பிள்ளையிடம் எழுத்தாளராகப் பணிபுரிந்தார்.

சிலகாலம்செல்லஇந்தியா சென்று சென்னையில் வசித்தார். அங்கு பல வல்ல புலவர்களை யடைந்து இலக்கண இலக்கியங்களையும், தருக்கம், சித்தாந்தம் முதலிய நூல்களையும், வடமொழியையும் பயின்று பாண்டித்தியம் அடைந்தார். பிறவூர்களுக்கும் சென்று பிரசங்கம் செய்து வந்தார். இணையில்லா நாவன்மைபெற்றஇவர் பிரசங்கங்கள் செய்தில் ஒப்பாரின்றிச் சிறந்து விளங்கினார். வேகமாகவும் பல மணித்தியாலங்கள் தொடர்ந்தும் பேசும் ஆற்றல பூண்டவர். எவர் எப்பொருளைப் பற்றிக் கேட்டாலும் அவர் திருப்தி யடையும்படி மறுமொழி சொல்லும் சமயோசித புத்தியுடையவர். இவருடன்வாதுசெய்துதோற்ற புலவர்கள் அநேகர்.

இவர் மாயாவாதத்தை நிராகரித்துப் பேசும் ஆற்றல் பூண்டவர். இதனால் சென்னையில் உள்ள பல அறிஞர்கள் ஒன்றுகூடி பிள்ளையவர்களுக்கும்மாயாவாதிகளுக்கும் வாதுஒன்று ஒழுங்குபண்ணினர். இதில் பிள்ளையவர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு மாயாவாதிகள் பதில் கொடுக்க முடியாது கலங்கினர். இந்நிராகரிப்புக்கூட்டத்தில் வெற்றி பெற்றபடியால் அச்சபையினர் "மாயாவாத தும்ச கோளரி" என்னும் பட்டத்தை இவருக்கு அளித்தனர். ஆரணி நகர சமஸ்தான வித்துவானும் இருந்து "அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்" என்ற பட்டத்தையும் அரசராற் கொடுக்கப்பெற்றவர். அக்காலத்துஇராமலிங்கர் பாடலை அருட்பா வல்ல மருட்பாதான் என மறுப்பு எழுதி, அதனால் சென்னை நீதிமன்றத்தில் இவர்மேல் வழக்குத் தொடரப்பட்டது. ஆனால்இவ்வழக்கில் பிள்ளையவர்களே வெற்றி பெற்றார். இவ்வெற்றியைப் பெரிய விழாவாக காஞ்சி மக்கள் கதிரைவேற்பிள்ளையவர்களை அழைத்துக் கொண்டாடினர். இத்துடன் அட்டவதானம், தசாவதானம் முதலியன செய்வதிலும் சிறந்து விளங்கினார். இதனால் இவரைச "தசாவதானி" என்றும் அழைத்தனர்.

இவர் பல நூல்களும் எழுதியுள்ளார். அவைகளுட் பலரால் மதிக்கப்பட்ட நூல்கள் சுப்பிரமணிய பராக்கிரமம், சைவபூஷண சந்திரிகை, திருஞானசம்பந்தர் வசனச் சுருக்கம், கருவூர்மான்மியம் முதலியனவாம். இவர் மேலைப் புலோலிக்கும் ஓரிருதடவை வந்து சொற்பொழிவாற்றிச் சென்றார். பின்பு சில காலத்தின் பின் நீலகிரியில் 1907-ம் ஆண்டு பங்குனி மாதம் மகநட்சத்தில் மறைந்தார். இவரது பொன் விழா இவரின் ஞாபகமாக மேலைப்புலோலியில் இயங்கும். நிலயத்தாரால் 11-4-57 ல் கொண்டாடப் பட்டது. இவரிடம் வி. க. உலகநாத முதலியார் போன்றவர்கள் பாடம் கேட்டனர். 1908-ம் ஆண்டு வி. க. அவர்களால் "கதிரைவேற்பிள்ளை சரித்திரம்" என்னும் நூலொன்று எழுதி வெளியிடப்பட்டது. பல பாடல்கள்மூலம் வி. க. தமது துக்கத்தை வெளியிட்டிருக்கிறார் அவற்றைப் படிக்கப் படிக்க பிள்ளையின் ஆற்றல், வலிமை முதலியன எளிதில் புலனாகும். உதாரணமாக,

"சங்கரனைப் போற்றிநிதஞ்
சாக்கியரைக் காய்ந்து
மன்னர்
சங்கந்தனை நண்ணிக்
சார்மகத்தி—லங்கயிலைப்
புக்க கதிரைவேற்
புண்ணியனைப் புன்
னெஞ்சே
யிக்கால வாசகனென்
றேத்து'

என்னும் பாடல்மூலம் அறியலாம். இதுபோல் பல அரிய பாடல்களை வி. க. அவர்கள் கதிரைவேற்பிள்ளையவர்களைப் பற்றிப் பாடி எமக்களித்துப் போந்தார். தமிழர்களாகிய நாம் எல்லோரும் கதிரைவேற்பிள்ளையவர்களைப் பற்றி வருங்கால மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் முன்னிற்போமாக. அவருடைய சிறப்புக்களையறிந்து அவற்றைவாழ்க்கையில் உபயோயோகப்படுத்துதற்கு இது பெரும் உதவியா யிருக்கும்.

### தானே இயங்கும் தொலைபேசி அமைப்பு

யாழ்ப்பாணத்திலும் தானே இயங்கும் தொலைபேசி அமைக்கப்பெற்றுள்ளது. ஐந்நூறு பேர் இம்முறையைப் பயன்படுத்த இப்பொழுதே முன் வந்துள்ளனராம்.

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்து கொள்ளலாம்.
S. கனகசபை
சிறுப்பர்
Std 14

## சமத்துவத்துக்காகச் சமய மாற்றம்

### தீமைதரும் செயல் என்கிறார்

— குன்றக்குடி அடிகளார்

"தமிழ் நாட்டிலே சமுகக்குறைகள் சில இருப்பதற்காகத் தாழ்த்தப்பட்டவர்களெனப்படுவோரிற் சிலர் பௌத்த மதத்துக்கு மாறப்போவதாக ஒரு செய்தியைப் பார்த்து வேதனை அடைந்தேன். சமத்துவத்துக்காகச் சமயத்தை மாற்றுவது தகாது. கோட்டைக்குள் ளிருந்து போராடி வெற்றி காண்பதே வீரருக்கு அழகு. கோட்டையை விட்டு ஓடி விடுவது கோழைத்தனமாகும். சமதர்ம சமுதாயம் ஏற்படப்போகின்றது அப்போது தீண்டாமை முதலிய எல்லாச் சமுகக் குறைகளும் மறைந்து விடும். அதற்கிடையே எமது பரம்பரைச் சமயச் செல்வத்தை இழந்து வெளியேறுவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கே பெருநட்டமாகும்".

# ஈழமாமுனிவர் ஞானப்பிரகாசர்

## சீவகாருண்ணியம் வளர்த்துத் திருநாள் கொண்டாடுக

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

ஈழமாமுனிவரெனப் போற்றப்பெறும் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் தென்மொழியையும் வடமொழியையும் ஐயந்திரிபறக் கற்ற மாதவச் செல்வர். சீவகாருண்யமும் அன்பும் நிறைந்த கருணைவள்ளல் — சிவயோகி—யந்திர கஷாயதாரி ஒருபொழுது யாசித்து உண்பவர். எல்லாம் சிவன் செயலாகக் கொண்டவர் மெய்ஞ்ஞானம் உடையவர். தமிழகத்தில் முதன்முதல் சிவஞானசித்தியாருக்கு உரை எழுதிய பெருமை இத்தவச் செல்வருக்கே உரியதாகும்.

இத்தகைய சுவாமிகள் அவதரித்த யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில்வியாபாரத்தின் பொருட்டுப் பல மக்கள் பசுக்கொலை முதலியன புரிய உதவுகிறார்கள். இவற்றைச் சைவச் சபைகள் தடுக்க வேண்டும். பசுக் செய்வோரும், கொலை பாதகர்க்கு விற்போரும் எரிவாய் நரகத்தையடைவர்.

சில சைவ உத்தியோகத்தர் இல்லங்களிலும் உயிர்க்கொலை நடைபெறுகிறது அவர்கள் சீவகாருண்யம் அன்பு என்பவற்றை ஒருவருக்குப் போதிப்பார்கள். பின்பு மறைவில் வேலைகாரனுக்குச் சொல்லிப் புலால் புசிப்பதற்குக் கொலை செய்விப்பார்கள் இவ்வித செயல்களும் சைவம் என்ற பெயருடன் நடைபெறுகின்றன.

உலகில் அன்பு சீவகாருண்யம் அகிம்சை ஆகியவற்றிற்கு இயேசு, புத்தர், காந்தி ஆகிய இவர்களை உதாரணமாகச் சொல்வார்கள். இவர்களுடைய சீவகாருண்ணியப் பண்புக்கு இரண்டாவதல்ல என்ற முறையில் நம் தமிழகத்தில ஒரு சந்நியாசி, தம் வாழ்க்கையில் சீவகாருண்ணியத்தை திலகக்களனுகக் கொண்டு வாழ்ந்து காட்டினரென்றால அவருடைய அன்பு அகிம்சை ஆகிய சிறப்புக்களை அளவிட யார் தான் வல்லார். இத்தகைய பெரியார் பரிபூரண சமாதியடைந்த தினம் பங்குனிப் பூசமாதலால் தமிழ்நாட்டில் இத்திருநாளைச் சைவர்கள் கொண்டாட வேண்டும். ஆதலால் சைவச் சபைகள் இப்பெரியாரின் தினத்தைக் கொண்டாடுக.

### விவேகானந்தசபையின் சமயப் பரீட்சை

கொழும்புவிவேகானந்த சபையார் சென்ற ஆண்டு நடத்திய அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சையின் முடிவுகள் வெளிவந்துள்ளன. 211 பாடசாலைகளிலிருந்து 12653 மாணவர் இப்பரீட்சைகளுக்குத் தோற்றினர். இத்தொகை சென்ற எந்த ஆண்டுத் தொகையிலுமிருந்து கூடியதா யிருக்கின்றதாகவின் இப் பரீட்சை நாட்டில் நிலையான இடம் பெற்றுள்ளதென்பது குறிப்பிடப் படுகின்றது.

### சைவக் குருத்துவப் பயிற்சி

சைவக் குருக்களாதற்கு வேண்டப்படும் பயிற்சி கொடுக்கும் கழக அமைப்பு முயற்சி ஒன்று காலத்துக்குக்காலம யாழ்ப்பாணத்திற் செய்யப்பட்டு வந்தது. ஆனால் அம்முயற்சி நன்கு சித்தியடையவில்லை. இத்துறையில இந்துமாமன்றம் இப்பொழுது ஈடுபட முன் வந்துள்ளதாம். குன்றக்குன்றக்குடி அடிகளார் இத்தேவை பற்றிக் குறிப்பிட்டுள்ளாரென்றுங் கூறப்படுகின்றது. மிகுந்த ஆர்வமிருக்கின்றதேயெனினும் இதற்குப் பெருந்தொகைப் பணம் தேவையாயிருப்பது செயலாறுதற்குத் தடையாயிருக்கின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
1. வேலணை கிழக்கு கதிரேசு சண்முகம்
2. ஷையூர் பெண் பொன்னம்மா
—வழக்காளிகள்

இல. MB/ 1256.
எதிராக
வேலணை கிழக்கு நாகலிங்கம் செல்லத்துரை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/ 1256 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957௵ வைகாசிமீ 11-ம்௳ சனிக்கிழமை முற்பகல் ஒன்பதுமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா: 1221/-ம். ரூபா: 750/- க்கு 29-9-56 தொடக்கம் 4-12-56 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 106/-

காணி விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை "கெம்மில்" பர. நெ. இல- பதினைந்து 15 வீடும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னர் சிற்றம்பலத்திற்குரிய வாதனமும் ஒழுங்கை முகப்பும், தம்பு கைம்பெண் நாகபூரணிக்குரிய வாதனமும், வடக்கு நல்லூர் கந்தசாமி கோவிலுக்குரியவாதனம், மேற்கு V. A. கந்தையாவிற்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு செல்லத்துரை பெண் அன்னலட்சுமிக்குரியவாதனம், இதடங்கலிற் சொரியலாயரைவாசி,

2, ஷையிறை "துரையன்சீமா, காளிங்கராயன் சீமா உமிக்காட்டு வயல்" பர. நீ. இல- பத்தொன்பது 19 குளி ஆறேமுக்கால் $6\frac{3}{4}$. இதில் மேற்குப்பக்கமாய்ப் பர. நீ. இல- ஏழு(7)கிணறும். எல்லை கிழக்கு திருநாவுக்சரசு ஸண் பாலாம்பாளுக் குரிய வாதனம், வடக்கு குமாரசுவாமி பாலசிங்கத்திற்குரிய வாதனம், மேற்கு கார்த்திகேசுபெண் பாக்கியத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம். தெற்கு ரேட்டு, இதடங்கலும், ஆனுல் இக்கிணற்றிலிருந்து மேற்கெல்லைக் காணிகருத் தண்ணீர் பாச்சுவதற்குப் பாவிக்கும் வழி வாய்க்காற் பாவிப்புரித்துப் பிற நீங்கலாக,

காரைநகர்,
1957ம்௵ பங்குனிமீ 26௳,
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்
M 6 12-4-57 (து 300

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்
கரம்பன் ஊர்காவற்றுறை வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து
வழக்காளி.

இல, M B 1042
எதிராக
1. பாலைக்காடு கரம்பன் ஊர்காவற்றுறை கணபதிப்பிள்ளை வயித்தியாம்பிள்ளை,
2. ஷையூர் பெண் அன்னம்மா
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 1042 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957ம் ௵ வைகாசிமீ 7 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா: 1256 - 25ம் ரூபா 750/— க்கு 19-6-56 தொடக்கம் 14-11-56 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்
காரைநகர் கிழக்கு தம்பையா கனகசபை பெண் மகேஸ்வரிப்பிள்ளை
வழக்காளி.
எதிராக
இல M B 889
1 காரைநகர் மேற்கு கனகசபை பொன்னம்பலம்
2 ஷையூர் பெண் வள்ளியம்மை
3 [illegible] காரைநகர் கிழக்கு தம்பையா கனகசபை
எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிககோட்டின் M B 889ம் இலகக வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957ம்௵ சித்திரை மீ 30 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் முறையே முதலாம் காணி ஒன்பது மணி தொடக்கமும் இரண்டாம் காணி பத்து மணி தொடக்கமுமாய் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3462—50ம் ரூபா: 3000/- கரு 17—3-56 தொடக்கம் 7—8—56 வரை பத்துவீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 252-26 சதம் கோட்டுசசெலவில் ரூபா 125/— கொடுபட்டது.

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவுக்கோவிற்பற்றுகளபூமியிறை "முதலைக் கிராயும் வதிராவத்தையும்" பர. நெ. இல. இருபத்தொன்றரை ($21\frac{1}{2}$) ஏல்லை கிழக்கு சின்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மைக்கும் கதிரவேலு பெண் மூத்தம்மாவிற்குமுரிய வாதனங்கள் வடக்கு பொன்னுத்துரை பெண் தங்கமுத்துவின் ஆதனம். மேற்கு வேலுப்பிள்ளை செல்லையாவிற்கும் சின்னப்பு பெண் தெய்வானைககுமுரியவாதனங்கள். தெற்கு சின்னத்தம்பி பெண் நாகமுத்துவிற்கும் சின்னத்தம்பி பொன்னுத்துரைக்குமுரிய வாதனங்கள், பதிவு C 215 - 80.

(2) ஷை காரைதீவுக்கோவிற்பற்று தங்கோடையிறை "குமிழங் குளி" பர, நீ, இல. எட்டு (8) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு முருகேசு சங்கரப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு கந்தப்பர் செல்லையாவின் உரிமைக்காரருக்கும் அம்பலவாணர் கனகசுந்தரத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு தில்லையம்பலம் அருமைநாயகததிற்குரிய வாதனம். தெற்கு மாரிமுத்து கைம்பெண் வள்ளியம்மைககுரியவாதனமும், ஒழுங்கை முகப்பும் வயித்தலிங்கம் கந்தையா பெண் இராசம்மாவற்குரிய வாதனமும். இதடங்கலும் ஆனுல் இந்தக காணியில் தெற்கெல்லையருகால் ஒழுங்கை முகப்பிலிருந்து கிழக்கெல்லைக காணிககுப் போக்கு வரவு செய்யும் கையொழுங்கைப் பாவிப்புரித்துப் பிற நீங்கலாக, பதிவு 289 - 113,

காரைநகர்
1957ம்௵ பங்குனிமீ 10௳
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
M 5 12-4-57 (து 300)

5 வீதமான வட்டியும் மூத்திரைச் செலவு ரூபா: 29—90 சதம்.


காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை "செம்மண் கலட்டி" பர. நெ. இல. $12\frac{1}{2}$ பன்னிரண்டரை. இதில் தென்மேற்குப் பக்கமாக நெ. பர. 5 ஐந்து குளி 1 ஒன்றும் பனைகளும் கிழக்கெல்லையில் நிற்கும் பத்துப் பனைகளும் எல்லை வேலிகளும் எல்லை கிழக்கும் வடக்கும் வஸ்தியாம்பிள்ளை சவிரிமுத்துவினுதனம், மேற்கு ரேட்டு. தெற்கு சரவணமுத்து சுந்தரத்தினுதனம்,இதடங்கலும்.

காரைநகர்
1957ம் ௵ பங்குனிமீ 19௳
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M; 8 12-4-57 (து 300)

திருக்கேதீச்சரநாதர்

# திருக்கோயில்



"தொண்டர் நாடொறும் துதிசெய
அருள் செய் கேதீச்சர மதுதானே"—தேவாரம்.

# தேவை

சபையின் சைவப்பிரகாச அச்சகத்திற்கு சைவசமய நூல்களிலும் தமிழிலும், பாண்டித்தியம் அடைந்தவரும், ஆங்கில அறிவுடையவருமாகிய ஒருவர் நூல் பிரசுர ஆசிரியராகத் தேவை. சபைக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும்.

## யாழ்ப்பாணம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

### 1956ஆம் ஆண்டில் நடந்த சங்கப் பரீட்சைகளில் சித்தி பெற்றோர்

**தமிழ்ப் பரீட்சைகள்:**

(அ) பண்டித பரீட்சை-முதலாம் பகுதி
நூனசித்தி:
ப 1-56 த. மார்க்கண்டு (இரண்டாம் பாடவகை)

(ஆ) பாலபண்டித பரீட்சை:
மூன்ரும் பிரிவு:
பா 6-56 சி சரோஜினிதேவி
பா 7-56 த: மாலோகமணி
பா 15-56 செ இராசரததினம்
பா 17-56 செ. மகேஸ்வரி
பா 32-56 வே தெய்வநாயகம்.
நூனசித்தி:
பா 2-56 ச. சாவித்திரிதேவி (இலக்கியம்)

(இ) பிரவேச பரீட்சை:
மூன்ரும் பிரிவு:
பி 12-56 மு கமலாதேவி,
பி 26-56 செ பராசத்தி
பி 29-56 ந. கயிலாயர்
பி 37-56 இ. சச்சிதானந்தம்
பி 40-56 சோ, கண்மணி
பி 42-56 சி. செல்லம்மா
பி 45-56 செ. கனகேஸ்வரி
பி 53-56 வை. பாலகிருஷ்ணன்.
நூன சித்தி:
பி 5-56 மு,பார்வதி(இலக்கணம்)
பி 6-56 செ. இரத்தினம், (இலக்கணம்)
பி 8-56 பொ, பராசகதி, (இலக்கணம்)
பி 13-56 ஆ, சரஸ்வதி, (இலக்கணம்)
பி 21-56 ஆ. சரஸ்வதி (இலக்கணம்)
பி 24-56 ம சுகிர்தமலர், (இலக்கணம்)
பி 30-56 சீ, புவனேஸ்வரி, (இலக்கணம்)
பி 32-56 ந, மாணிக்கம், (இலக்கணம்)
பி 36-56 க. இராசம்மா, (இலக்கணம்)
பி 43-56 க தங்கராசா, (இலக்கணம்)
பி 50-56 க. இராசம்மா, (இலக்கணம்)
சமய [illegible]
பிரவேச பரீட்சை:
இரண்டாம் பிரிவு:
பி 56-56 சீ. சிவகாமி;

### வள்ளுவர் காட்டிய மகளிர் பெருமை

—0—

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெண்கள் ஆண்களிலும் பார்க்க உணர்ச்சியிற் சிறந்தவராய் விளங்குகின்றனர். உணர்ச்சி மிகாமையால் பெண்கள் அறிவிழந்தவர்கள் என்பது ஒருகாலத்தும் உண்மையாகாது. உணர்சியிற் குறைந்த ஆடவர் அறிவிற் சிறந்தவர் என்பதும் உண்மையல்ல.

வளரும்

### ஆசிரியர்கள் நிலைமைபற்றிக் கிளர்ச்சி

உதவிப்பணம் பெறும் பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் அரசாங்க சேவையிலுள்ளோராக்கப் படுதற்கு முயற்சி செய்கின்றுர் கல்விமந்திரிதி ஸ்ரீதக நாயக. கல்வித்தாபனங்கள் பல இச்செயலை எதிர்க்கின்றன. அகில இலங்கை ஆசிரியசங்கம் இவற்றுள் ஒன்ருகும். அப்படியிருந்த போதிலும் தாம் எடுத்துக் கொண்ட முயற்சி முன்னேற்றப்படு மென்கிருர் மந்திரி.

இலங்கைச் சாதிக் குரு சங்கம் (லங்கா ஜாதிக குரு சங்கமய) 7,000 அங்கத்தவர்களை யுடையதாயிருக்கின்றதென்றும், அத்தகைய சங்கம், ஆசிரியர்கள் அரசாங்கத்திற் சேர்வதை ஆதரிக்கின்றதென்றும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
1. காரைநகர் வடக்கு தற்போது தொடுவாய் இராச்சியப் பகுதியில் சிலாங்கூர் கிளுங்கில் வசிகரும் நல்லதம்பி இராசையாவும்
2. ஷையூர் பெண் இராசம்மாவும் அவர்களின் அற்றோணித் தத்துவகாரி காரைநகர் கிழங்கு முருகேசு பெண் தங்கமுதது
—வழககாளிகள்.

இல. MB/ 940.
எதிராக:
1, காரைநகர் மேற்கு K ஆறுமுகம் செல்லையாபிள்ளை
2, ஷையூர் E.ஆறுமுகம் கைம்பெண் சிதம்பரம்மாள்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் MB/ 940-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகள் 1957-ம் ௵ வைகாசிமீ 24 ம் திகதி சனிககிழமை முற்பகல் முறையே, ஒன்பது, பத்து பதினொருமணி தொடக்கமாக அந்தக் காணிகருள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 9896/= ம். ரூபா: 7000/– கரு 30-4–1956 தொடக்கம் 18-9–1956 வரை ஆறு வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 295/48 சதம். இதில் ரூபா: 200/- அறவு பண்ணப்பட்டது.

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று களபூமி இறை "உப்பு வயல்" நெ. பர. $12\frac{3}{4}$ பன்னிரண்டே முக்கால். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் இராசம்மாவுக்கும் எதிராளிக்குமுரியவாதனங்கள் வடக்கு கந்தையா சிவசம்புவின் உரித்தாளரின் ஆதனம், மேற்கு வாய்க்கால், தெற்கு தம்பையா பெண் சின்னம்மாவின் ஆதனம். இதடங்கலும்.

2. ஷை தங்கோடை யிறை "இராலி" நீ. பர. 6 ஆறு குளி 3 5/8 மூன்றரையேயரைக்காலும் பனை வான்பயிர் செய்பயிர்கள் வீடு அடுக்களை தலைவாயில் கிணறும், எல்லை கிழக்கு எதிராளிக்குரிய வாதனம், வடக்கு ரேட்டு மேற்கு ஒழுங்கை, தெற்கு பின்னுற் காணும் மூன்ரும் ஆதனமும் எதிராளிக்குரிய ஆதனமும்.

3 ஷையிறை "இராலி" நீ. பர. 2 இரண்டு குளி 3 மூன்றும் பனை தென்னைகளும், எல்லை கிழக்கு எதிராளிககுரியவாதனம். வடக்கு மேற்சொல்லிய இரண்டாம் ஆதனமும் ஒழுங்கையும், மேற்கு ஒழுங்கையும் சிவசம்பு கைம்பெண் நாகம்மாவின் ஆதனமும், இதடங்கலிற் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும் இன்னும் மிகுதி $\frac{1}{4}$ பங்குக்கு 1947-ம்௵ கார்த்திகைமீ 19 ந்-திகதி நொத்தாரிஸ் கா. சி. மகேசசர்மா முன்பாக 8695-ம் இலக்கத்தில் முதலாம் எதிராளி பேருக்கு முடிந்த அறுதி உடன் படிக்கையில் உள்ள நயம் உரித்துச் சோந்தை முழுவதும்,

காரைநகர்,
1957-ம்௵ பங்குனிமீ 4-ம்௳

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M 7 12-4 (து 300)

ஆகையினலே, அதனிலும் குறைந்த தொகை அங்கத்தவர்களை யுடைய அகில இலங்கை ஆசிரிய சங்கத் கருத்துக்கு மேலிடம் கொடுக்க முடியாதென்றும் தமது செயலுக்கு மந்திரி நியாயம் காட்டுகின்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 819

R. N. தம்பித்துரை பெண் கனகமணி கொக்குவில் கிழக்கு

— வழக்காளி

எதிர்

சீனி ஐயர் முருகேசு ஐயர் ஊர்எழு எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M. B. 819-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஷு ஆனி மீ 1-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30மணி தொடககம் அந்தக் காணிகருள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபாய் 1209-33 ரூபா 750க்கு 13-2-1956 துவக்கம் 3-5-56 வரைக்கும்பதது வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் தீர்வைத் திகதியிலிருந்து ஐந்துவீத வட்டியும் பணம் கொடுக்கும் வரையில் கோட்டுச் செலவு ரூபாய் 172-02.

காணி விபரம்

யாட்பாணம நல்லூரைச் சேர்ந்த கொக்குவிலில் மத்தனை என்னுங்காணி வி. இ. 4 குளி 162/10 வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் வளி வாய்க்கால் பாவிப்பு உருததும் பனைகளும்.

எல்லை கிழக்கு ஒழுங்கை

வடக்கு சன்னததுரை பெண் செல்லம்மாவின் ஆதனம்.

மேற்கு இளையதம்பி மகள் மகேசுவரியின் ஆதனமும் சகோதரனும்

தெற்கு சிவசுப்பிரமணியம் கோவில் ஆதனம்.

இந்த ஆதனம் உலாந்தா M. செல்லத்துரை அவர்களால் வரையப்பட்ட 164-ம் இலக்கப் படத்தில் 3ம் லொட்டாககாட்டப்பட்டிருக்கிறது.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
4-4-57.
M. 2 12-4-57 (து 100)

## கோட்டு விற்பனவு விளப்பரம

இல. M B 1245

செல்லையா கனகரத்தினமும் பெண் நாகேசுவரியும்

உரும்பிராய்
யாழ்ப்பாணம்.
வழக்காளி.

எதிர்

1. கந்தர் நாகனுதி
2. சின்னத்தம்பி சின்னையா கைம்பெண் செல்லம்மா
3. ஆறுமுகம் பொன்னையா
4. பொன்னர் ஐயாதுரை கைம்பெண் அன்னப்பிள்ளை

கோண்டாவில்
எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 1245ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஷு ஆனி மீ 8ம்உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 1202/- இதின்பின் ரூபாய் 1000/- க்கு 24-9-56 துவக்கம் 22-11-56 வரைக்கும் பத்துவீத வட்டியும் அதின்பின் முழுத் தொகைக்கும் பணம் கொடுக்கும்வரை ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 221-55,

யாழ்ப்பாணம் நல்லூரை சேர்ந்த கோண்டாவிலில் விக்கனை என்னும் காணி நீ. இ. 3-ம் வீடும் தலைவாசல் குசினி வான் பயிர் செய்பயிர்களும். மேற்கெல்லைக் காணிக்கு தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வளிவாய்க்கால் பாவிப்பு உரித்தும்.

எல்லை கிழககு செல்லையா கைம்பெண் சுந்தரத்தின் ஆதனம்.

வடக்கு ஒழுங்கை.

மேற்கு சம்பு கைம்பெண் செல்லம்மாவின் ஆதனம்.

தெற்கு வேலாயுதர் பொன்னையாவும் பங்காளரும். இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
4-4-57.
M 3 12-4-57 (து. 100)

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன கணிபயது.

[ இவ்வாரப் பலன்கள் 14—4—57 —— 27—4—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

முதல் இரு நாட்களும் ஒரு அளவுககு நல்லாயிருககும் நீர் புதுககருமங்களைத தொடங்கலாம். ஆனுல் செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன கவனமாய்க கழிககவேண்டும் இரு கிழமையின மிகுதிககாலம் நல்ல பலனைத தரும். 18-ந் திகதியின் பின உம்முடைய கருமஙகளில் மிகுந்த திருத்தததைக் காண்பீர்.

**இடபராசி கார்த்திகை 2, 3 4-ம் கால்கள ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

18-ந் திகதிக்குமுன் எந்த ஒரு முயற்சியையும் நீர் ஒழுங்கு பண்ணலாம். 19-ந் திகதி, 20-ந்திகதியுடன் 21-ந் திகதி காலை அதிக தொந்தரவாயிருக்கும். இனதத வர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. இரு வாரததின் மிகுதி ஒரு அளவுககு நல்லாயிருக்கும். ஆனுல் நடைமுறைகளில் மாற்றங்களுககிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம.**

இரு வாரத்தின் முன் அரைப் பங்கில் பணங்கிலைமைகள் திருந்தும். உம்முடைய கடனகள சிலவற்றை நீர் நீககககூடியதாயிருககும். போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம் இரு வாரத்தின் பின் அரைப்பகுதி சிறிதுப நல்லாயிருககமாட்டாது. கருமங்களை இலகுவாக ஒழுங்குபண்ணமாட்டாது வருந்துவீர். நண்பர் உமககு எதிராகத திரும்பககூடும். கந்தோரில் தொந்தரவுகளுககுமிடமுண்டு ஆனுல் பகைவர் உம்மை வெல்லமுடியாது. 21-ந் திகதி பிற்பகல் 22-ம் 23-ம் திகதிகள் கவனமாய்க்கழிக்கவேண்டும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

18-ந் திகதி மட்டும் கருமங்கள் அதிகம நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய இனததவர்கள் நண்பருடன் நீர் சண்டையிடவேண்டி நேரலாம். வாககு வாதங்களைத் தவிர்க்கவும். 18ந் திகதியிலிருந்து கருமங்கள் திருந்தும். ஆனுல் 24-ம், 25ம் திகதிகளும் 26-ந் திகதி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். மிகுதி இரு வாரமும் மிக நல்லாயிருககும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

18-ந் திகதி வரையும் உம்முடைய முயற்சிகளை நீர் ஒழுங்கு பண்ணுவது இலகுவாயிருக்கும். அதன்பின் அதிக கண்டனங்களையும எதிர்ப்பையும் நீர முன்னிட வேண்டி வரலாம். குடும்ப வாழ்க்கைப் பகுதியும் சிறிதும் நல்லாயிருகக மாட்டாது. உம்முடைய பிதாவழி இனததவர்களும் தொந்தரவுண்டாககுவார்கள் 26-ந் திகதி பிற்பகலும் 27-ம் 28 ம் திகதிகளும் கவனமாய்க் கழிகக வேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்**

இந்த இரு வார காலத்தில் நீர் அதிக குழப்பங்களை முன்னிட வேண்டி வரும் இடைஞ்சல்களிலிருந்து நீர் மிகக கவனமாய் நீங்கவேண்டும். தேகசுகம் சிறிதும் நல்லயிருகக மாட்டாது உம்முடைய இனததவர்களிலும் பார்க்க அன்னியரும் அறியாதவர்களும் அதிக உதவியாயிருப்பர் அபாயங்களைப்பற்றி எச்சரிககையாயிருக்கவும்.

**துலாம் சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

18-ந் திகதி வரையும் நீர் சமாளிக்கவேண்டும், அதன் பின் உம்முடைய கருமங்கள பலவற்றில் அதிக திருத்தத்தைக் காண்பீர். பண நெருககடிகள் நீக்கப்படும் போட்டியிடுவோரை வெல்லுவதும் நிச்சயம். ஆனுல் உம்முடைய தேகசுகத்தைப்பற்றிக் கவனமாயிருக்கவும் குடும்பக் கருமங்களும் சிறிதும் நல்லாயிருக்க மாட்டா.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை**

18-ந் திகதி வரையும் கருமங்கள் ஒழுங்காய் நடைபெறும் 18-ந் திகதியின் பின் சில விரும்பத்தகாத மாற்றங்களுக்கிடமுண்டு. ஒரு உத்தியோக மாற்றம் அல்லது இடமாற்றம அல்லது ஒரு செலவான பிரயாணததுககிடமுண்டு அதிக எதிர்ப்பை நீ முன்னிடவேண்டி வரும். ஆனுல் பகைவர் உம்மை வெல்ல முடியாது

**தனுராசி மூலம் பூராடம் உததராடம், 1ம் பாதம்.**

18ந் திகதி வரையும் கருமங்கள் மிகத தளப்பமாயிருககும். ஆனுல் அந்த நாளின் பின் இடைஞ்சல்களிலிருந்து நீர் நீங்கக்கூடியதாயிருககும் உததியோக சித்தியுப பகைவரை வெல்லுதலும் நிச்சயம் ஆனுல தேகசுகம விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். தேகத்தில் அளவுகடவுந்த சூட்டுககிடமுண்டு.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம 1, 2ம் பாதம்.**

18 ந் திகதி வரையும் கருமங்கள் ஒழுங்காய் நடைபெறும். ஆனுல 18ந் திகதியின பின் மாறுதலகளுக்கிடமுண்டு, நீர் அதிக எதிர்ப்பை முன்னிட வேண்டி வரும். இனததவர்களுடன் சண்டைகளுககும சிறு அபாயங்களுக்கும் இடமுண்டு இடைஞ்சல்களுககுள நிச்சயமாய் அகப்பட வேண்டி வருமாகையால் மற்றவர்களுடைய கருமஙகளில் நீர் தலையிடக்கூடாது.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம். சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

முதல் ஐநது நாட்களின் பின் உம்முடைய கருமங்கள் பலவற்றில் அதிக திருத்தத்தைக் காண்பீர். எதிர்ப்பு நீங்கிவிடும். உம்முடைய கருமங்கள் பலவற்றில் நீர் விரும்பியபடி செய்யலாம். தனலாபங்களும் புதுமுயற்சிகளிற் சித்தியும நிச்சயம.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

புது முயற்சிகள் 18ந் திகதிக்கு முன் ஒழுங்குபண்ணப்படவேண்டும். அத திகதியின் பின் உம்முடைய கருமங்கள் பலவற்றில் அதிக எதிர்ப்பைக் காண்பீர். வழக்குகளுககும் இரகசியப்பகைவர் மூலம் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. சிறு அபாயங்களுக்கும் இடமில்லாமலில்லை. சிறிது காலததுக்குத் தாழ்மையாய் நிற்கவும்

## சனநாயக ஆட்சிச் சிறப்புகள்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

யன அதில் நன்கமைதல் வேண்டும். இது ஒரு நாட்டிலிருந்து எடுத்து தீவிர முறைகளால் மறறொரு நாட்டில் வைத்து நிலை பெறச் செய்யத் தக்க தொன்றல்ல. இவ்வாறு இதன் சிறப்புககளைப் பேசுகின்றோமே யென்னும் பல நாடுகளில் இது நன்கு நடைபெறவில்லை என்பதையும் நாம் அறிவோம். இந்நாட்டில் பெரும அளவுக்கு இது சிறநது விளங்குகின்றது என்று நடுநிலை தவறுதலின்றித் துணிவாகக் கூறலாம். இச் சிறப்புக்குக் காரணம் இச் சபை அங்கத்தவர்களாகிய எங்கள் விவேகமல்ல, எங்கள் நாட்டுமக்களின் மனத்தில் இடம்பெற்றுள்ள சனநாயக உணர்ச்சியென்றே கருதுகிறேன் என்று மேலும் பேசுகையில் கூறினூர்.

## அரசியல் அலை

[1-ப் பக்கத் தொடர்ச்சி]

றது.

தலைவரைத் தலைவர் தாக்குவதிலும் கட்சியைக் கட்சி கண்டிப்பதிலும் ம. ஐ. மு; ஐ. தே. க. இரு கட்சிகளும் காலத்தையும் கவனத்தையும் காசையும் செலவு செய்து வருவதால் நாட்டிற்கு எவ்வளவு நயம் உண்டென்பதை மக்கள்வாய்க் கேட்டறிவார்களேயானுல் மந்திரிமார்கள் தங்கள் வாய்க்குப் பூட்டுப்போட எண்ணுவார்களேயனறி, பொது சனத்துககோ அல்லது செய்தித் தாள்களுககோ வாய்ப் பூட்டுப் போட எண்ணமாட்டார்கள்.

திரிசிங்கள முன்னணி ஐ. தே. கட்சியுடன் ஒன்றுக வேண்டுமென்று யோசனை செய்கின்றதாம். ம. ஐ. மு., ஐ. தே. க. இக் கட்சிகளின் அங்கத்தவர்களே திரிசிங்கள முன்னணியினர் என்ற உண்மை திரைநீக்கம் செய்யப்பட்டு விட்டது.

## இந்தியாவுக்கெதிராய்ப் போராம்!

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுககு மிடையிலுள்ள எல்லைப் புறத்தில் வாக்கா என்னும இடத்தில் அமிர்தசரசுககுப் படை எடுத்துச் செல்லும் ஒரு குழுவினர் தங்கியிருக்கின்றனரென்று செய்திஒன்றுசொல்லுகின்றது. காஷ்மீர்ப் பிணக்குத் தீரும் வரையும் இக் குழுவனர் அவ்விடத்தில் தங்குவார்களென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## கேள்வி பற்றிய அறிவித்தல்

மானிப்பாய்க் கிராமச்சங்க அக்கிராசனரால் 1957-ம் ஆண்டு சித்திரை மாசம் 23-ம் திகதி (23-4-57) காலை பத்துமணிவரை விளாததியடி குரக்குலிப்பான் கட்டைப்பாலி நாச்சுமார்கோவில் ஒழுங்கைக்கு "சீல்" வைத்த கேளவிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(2) கேள்விகள் கிராமச்சங்கக் கந்தோரில் அதன் பொருட்டு வைககப்பட்டிருககும் கேளவிப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். அல்லது கிராமச்சங்க அககிராசனரின் விலாசத்திற்குப் பதிவுத தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது கூட்டததல் கொடுககப்படல் வேண்டும் "ரெண்டரின்" பிரதியொன்று வடபகுதி உதவித தலதாபன அதிபருககு மேற்படி திகதயில் குறித்த நேரததில் கிடைககககூடியதாக அனுப்பப்படல் வேண்டும்

(3) கேள்விகள் உத்தியோக பூர்வமான பததிரங்களில் எழுதக் கொடுக்கபபடுதல்வேண்டும். அப்பததிரங்கள் அதன்பொருட்டு ரூபாய் 25/= இருபததைந்து பிணைப்பணமாக இககந்தோரில் கட்டியதும் (22-4-57, மாலை 12-30 மணிவரை தலைவரால் வழங்கப்படும. கேளவிகளில் உள்ள சகலமாற்றங்களும அழித்தல்களும கேளவிக்காரனின் கையொபபததால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(4) அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று கிராமச்சங்க அககிராசனரால் அறிவிக்கப்பட்ட இருவாரங்களுள் உரிய பிணைப்பணததைக் கட்டி ஒப்பந்தம் செய்து வேலையை ஆரம்பிக்கத தவறும் எககேள்விககாரரதும் கேள்விப் பிணைப்பணமான ரூபாய் 25/= இருபததைந்து திருப்பிக் கொடுபட மாட்டாது.

தலைவர்
கிராமச்சங்கம், மானிப்பாய்.

மானிப்பாய்,
9-4-1957.
M. 4 12-4-57.

## திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை

நாள் : ஏவிளம்பி ஷு சித்திரைமீ ௧௨ உ (25-4-57) வியாழக்கிழமை.

இடம் : சைவபரிபாலன சபை நாவலர் மணடபம்.

நிகழ்ச்சிகள்:

முற்பகல 9 பிற் பகல் 1 கடவுளாராதனை, நால்வர் பூசை, திருநாவுக்கரசு நாயனுர்சரித்திரம்படித்தல், மாகேசுரபூசை.

இரவு $6\frac{1}{2}$ தமிழ்மறையோதல் ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்

$7\frac{1}{2}$ — $9\frac{1}{2}$ பிரசஙகம்

விஷயம் :

"திருநாவுக்கரசுநாயனுர்"

விரிவுரையாளர்

திரு வே. சோமசுந்தரம்அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 10-4-57.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 12-4-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org